# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜேக்)

## டிட்டோஜேக் மாநில உயர்மட்டக்குழு

## 29.08.2024 நாளிட்ட காணொளி வழிக் கூட்ட முடிவுகள்

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு டிட்டோஜேக் பேரமைப்பின் மாநில உயர்மட்டக்குழு கூட்டம் 29.08.2024 வியாழன் மாலை 06.30 முதல் 08.30 மணிமுடிய காணொளி வாயிலாக நடைபெற்றது. தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச்செயலாளர் (பொறுப்பு) **திரு.ஈ.இராஜேந்திரன் அவர்கள்** தலைமையேற்றார். டிட்டோஜேக் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்று 31 அம்சக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக அறிவிக்கப்பட்ட போராட்ட நடவடிக்கைகளை எழுச்சியுடன் செயல்படுத்திட தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்டது.

### கூட்ட முடிவுகள்

1. 01.09.2024 ஞாயிறு அன்று தமிழகம் முழுவதும் 38 மாவட்டத் தலைநகர்களிலும் போராட்ட ஆயத்தக் கூட்டங்களை திட்டமிட்டபடி எழுச்சியுடன் நடத்துவது எனவும், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்டங்களில் பார்வையாளர்களாகப் பங்கேற்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

2. 02.09.2024 திங்கள்கிழமை மாலை தமிழகம் முழுவதும் அனைத்து வட்டாரக்கிளைகளிலும் போராட்ட ஆயத்தம் மற்றும் ஆசிரியர் சந்திப்பு இயக்கம் திட்டமிடல் கூட்டங்களை நடத்துவது எனவும், டிட்டோஜேக் இணைப்பு சங்கங்களின் வட்டாரக்கிளைப் பொறுப்பாளர்கள் அனைவரும் அவசியம் அக்கூட்டங்களில் பங்கேற்கச் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. 03.09.2024 முதல் 09.09.2024 முடிய ஆசிரியர் சந்திப்பு இயக்கங்களை தொடர்ந்து நடத்தவேண்டும் எனவும், பள்ளி வாரியாக டிட்டோஜேக் வட்டாரப் பொறுப்பாளர்களும், அந்த ஒன்றியத்திற்கு உட்பட்ட மாவட்டப் பொறுப்பாளர்களும் ஒருங்கிணைந்து சென்று 10.09.2024 வேலைநிறுத்தப் போராட்ட துண்டுப் பிரசுரங்களை ஆசிரியர்களை நேரில் சந்தித்து வழங்க வேண்டும் எனவும், 10.09.2024 வேலை நிறுத்தப் போராட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் 100 சதவீதம் பங்கேற்பதை உறுதி செய்திட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4. 3 நாள் டிபிஐ வளாக தொடர் முற்றுகைப் போராட்டத்தின்போது நம்மை அழைத்து பேசிய **மதிப்புமிகு. பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர்** அவர்கள் ஆகஸ்ட் 31 வரை கோரிக்கைகள் நிறைவேற்ற அவகாசம் கோரிய நிலையில் செப்டம்பர் முதல் வாரத்தில் அவரை நேரில் சந்தித்து நமது கோரிக்கைகள் தொடர்பாக ஆணைகள் வழங்க வலியுறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**5.** **நமது 31 அம்சக்கோரிக்கைகள் தொடர்பாகவும், ஏற்றுக்கொண்ட 12 அம்சக்கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் டிட்டோஜேக் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்களை உடனடியாக அழைத்துப்பேசி விரைந்து தீர்வுகாண வேண்டும் என மாண்புமிகு.பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களை டிட்டோஜேக் பெரிதும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.**

திரு. **ஈ.ராஜேந்திரன்**
பொதுச்செயலாளர் (பொறுப்பு)
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **கே.பி.ரக்ஷித்**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

திரு. **அ.வின்சென்ட்பால்ராஜ்**
பொதுச்செயலாளர்
தமிழக ஆசிரியர் கூட்டணி

திரு. **ச.மயில்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **இரா.தாஸ்**
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **சி.சேகர்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்

திரு. **இலா.தியோடர் ராபின்சன்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

மன்றம் திரு. **நா.சண்முகநாதன்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

திரு. **வி.எஸ்.முத்துராமசாமி**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **கோ.காமராஜ்**
பொதுச்செயலாளர்
தமிழக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **சி.ஜெகநாதன்**
பொதுச்செயலாளர்
ஜெ.எஸ்.ஆர். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **டி.ஆர். ஜான் வெஸ்லி**
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கம்